
# நிர்குண மானஸ பூஜை

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



**ப்ரக்ஞன்**

# நிர்குண

# மானஸ பூஜை

தெளிவுரை

## ப்ரக்ஞன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | நிர்குண மானஸ பூஜை |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2020 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | 28 |
| **விலை** | : | அக விழிப்பு |

| | | |
|---|---|---|
| **பதிப்பாளர்** | : | ஓம் கிராபிக்ஸ்<br>கோயமுத்தூர். |

# நிர்குண மானஸ பூஜை

நம்முடைய சனாதன தர்மத்தின் இந்துமத பாரம்பரியத்தில், இறைவனை வழிபடுவது, அவனுக்கு பூஜைகள் செய்வது என்பது, இந்துவாக பிறந்த ஒவ்வொருவரின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வாகும்.

அன்றாட வாழ்வில், மன அமைதியை அடைவதற்கு ஒவ்வொருவரும் கடவுள் வழிபாடு மற்றும் பூஜைகள் செய்ய வேண்டும்.

இந்த வழிபாட்டிற்கு சில பாத்திரங்கள், பூக்கள், தூப, தீபங்கள் போன்றவைகள் தேவைப்படுகின்றன. ஒரு பக்தன் இறைவனைப் பற்றி அறிவதில் உள்ள ஆர்வம் என்பது, அவன் தன்னைப் பற்றி அறிவதற்கு ஒப்பாகும்.

எவ்வாறு, ஒரு தாய் ஆனவள் தன் குழந்தையை தனக்கு வேறாகப் பார்க்காமல், தன்னில் ஒரு அங்கமாகவே தன் குழந்தையைக்கருதி, காத்து வருகின்றாளோ? அதுப்போல, நம் அனைவருக்கும் தாயுமானவனாக இறைவன் இருந்துக் கொண்டு, நம்மையெல்லாம் காத்து, இரட்சித்து, அருள் பாலிக்கின்றான் என்பது, நம் அனைவரிடமும் உள்ள உயரிய நம்பிக்கை.

பொதுவாக, தாய், தந்தையை தனையன் எப்படி வணங்கி, வழிபடுகின்றானோ? அப்படியே, நம் அனைவருக்கும் தாயுமானவனை வழிபடுவது என்பது, இரண்டு வகைகளில் இருக்கின்றது.

அவைகள்,

1. **சகுண ப்ரஹ்ம வழிபாடு**
2. **நிர்குண ப்ரஹ்ம வழிபாடு** என்பதாகும்.

இதிலே, சகுண ப்ரஹ்ம வழிபாடு என்பது, இறைவனை தனக்கு பிடித்தமான வடிவங்களில் வடிவமைத்துக் கொண்டு வழிபடுவது.

அதாவது, தன் தாய், தந்தையை எப்படி உருவத்தில் பார்த்து, வணங்கி, வழிபடுக்கிறோமோ? அதுப்போல, நம் எல்லோருக்கும் தாய், தந்தையாக இருக்கின்ற இறைவனை ஒரு உருவத்தில் கொண்டு வந்து வழிபடுவது, "**சகுண ப்ரஹ்ம வழிபாடு**" ஆகும்.

அடுத்து, **நிர்குண ப்ரஹ்ம வழிபாடு** என்பது, அவ்யக்தப் பொருளில் (வெளிப்படாத பிரஹ்மத்தில்) ஆர்வம் கொண்ட அக நாட்டம் கொண்டவர்களுக்கு, அதன் வழிபாடு மிகவும் சிரமம்.

அதாவது, உடல்மீது பற்று உள்ளவர்களுக்கு அவ்யக்த நெறி (நிர்க்குண உபாசனை) மிகவும் கடினமானது. எனவே, உடல் உணர்ச்சி எனப்படும் **தேகாபிமானம்** உள்ள வரையிலும், நிர்க்குண உபாசனை மிக மிகக் கடினமாகும்.

பொதுவில், சாதாரண பாமர மனிதனுக்கு, சகுண உபாசனை எனப்படும் உருவ வழிபாடுதான் மிகவும் சிறந்தது. அவன், சகுண உபாசனையைச் செய்ய வேண்டிய முறையில் தவறாமல் தொடர்ந்து பின்பற்றினால், முடிவில் அது அவனை நிர்க்குண உபாசனைக்கும் அழைத்துச் செல்லும்.

அதாவது, நடக்கவே முடியாதவனுக்கு விரைந்தோடுவது என்பது சாத்தியமல்ல. அதுப்போல, சகுண உபாசனையிலேயே நிலைபெறாதவன், நிர்க்குண உபாசனையில் நிலைபெறுவது என்பது இயலாத காரியம்.

நிர்க்குணப் பிரஹ்மம், சகுணப் பிரஹ்மம் ஆகியவை ஒரே காகிதத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. சகுண பிரஹ்ம உபாசனையில் சிறப்பாக ஒருவன் நிலைப்பெற்று விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் மீது பிரீதி (பேரன்பு) கொள்ளும் சகுண பிரஹ்மம் (பிரபஞ்ச மனம்), தனது மறுபகுதியாக விளங்கும் நிர்க்குண வடிவத்தை அந்த பக்தனுக்குக் காட்டிக் கொடுத்து அருள் பாலிக்கும்.

நிர்க்குணப் பிரஹ்மம் பற்றிய வெறும் நூலறிவை ஏராளமாகப் பெற்றிருப்பதைவிட, சகுண பிரஹ்மம் பற்றிய அனுபவங்களைச் சிறிதளவு சுயஅனுபவமாகப் பெற்றிருந்தாலும் அதுவே சாலச் சிறந்தது.

சகுணபிரஹ்ம உபாசனை என்பது, நிர்க்குண பிரஹ்ம உபாசனை என்னும் உயரிய இலட்சியத்தை அடையப்போகும் பக்திப்பாதையில் உள்ள ஒரு பக்தனுக்கு, மனப்பக்குவத்தையும், மனத்தூய்மையையும் தருகின்ற ஓர் படிநிலையாக, இருக்க வேண்டும் என்பது, பக்தியில் திளைத்தோங்கிய அத்வைத வேதாந்திகளான மதுசூதன சரஸ்வதி, ஸ்ரீஅப்பைய தீட்சிதர் போன்ற மகான்களின் நோக்கில் சொல்லலாம்.

சகுண உபாசனையில் மனதின் உணர்ச்சிகளான **அன்பு, கருணை** ஆகியவற்றுக்கே முக்கிய பங்கு உண்டு. நிர்க்குண

உபாசனையில் **விவேகம், வைராக்கியம்** போன்ற, புத்தி சம்பந்தமான செயல்களுக்கே முக்கியப் பங்கு உண்டு.

பொதுவாக, **'உபாஸனா'** என்றால், சமஸ்கிருதத்தில் **"அருகில் உட்கார்ந்து"** என்று பொருள். அதாவது, பாடம் படிக்க வருகின்ற மாணவன், படிப்பை கற்றுக் கொடுக்கும் சத்குருவின் அருகே அமர்ந்துக் கொண்டு, அவரது உயரிய உபதேசத்தை மனதினால் உள்வாங்குவது ஆகும்.

அதன் அடிப்படையிலே, இந்து தர்மத்தில் குரு, தெய்வம் போன்றவர்களை அணுகுவதற்கு இந்த உபாசனா முறை உள்ளதினால், உண்மையிலேயே, ஆன்மீகம் என்பது, உத்தம சாதகனின் மயக்கமடையும் மனதினை, மனமற்ற நிலைக்கு உயர்த்துகின்ற உன்னதமான சாதனை முறையாகும்.

ஆகவே, நிர்குண ப்ரஹ்ம வழிபாடு என்பது, புற கருவிக் கரணங்களைக்கொண்டு செய்யாமல், நம்முடைய அகக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் மற்றும் உள்ளம் போன்ற அந்தக்கரணத்தின் மூலம் செய்யப்பட வேண்டிய ஒன்று.

அதைப்பற்றி, இந்த நூலின் வாயிலாக, குருவும், சிஷ்யனும் கலந்துரையாடும் ஒரு கேள்வி, பதில் பகுதிப் போன்று, ஆச்சாரியர் **ஸ்ரீ ஆதிசங்கரர்** அவர்கள் நிர்குணமான ப்ரஹ்மத்தை மனம் கடந்த நிலையில் மனிதன் அநுபவிக்கும் முகமாக இந்த நூலின் வாயிலாக அறிவுறுத்துகின்றார்.

மேலும், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் **ஒளி, பேரின்பம், சுதந்திரம், அறிவு, அழியாமை** போன்றவைகளுக்கான ஒரு இயற்கையான உந்துதல் உள்ளது.

இந்த உந்துதல் மட்டுமே, அவனை பொருள் முதல்வாத உலகத்திலிருந்து **சுய - விடுதலையின்** வழியை நோக்கித் தூண்டுகிறது.

அதற்கான சாதனையின் மூலம், அவன் தன்னை உச்ச சக்தி அல்லது பிரபஞ்சத்தின் இறுதி யதார்த்தத்திற்கு தன்னை முழுவதுமாக அர்பணிக்க வேண்டும்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்**

# நிர்குண மானஸ பூஜை

**சிஷ்ய உவாச: –**

அக2ண்டே3 ஸச்சிதா3நந்தே3 நிர்விகல்பைக ரூபிணி |
ஸ்தி2தே(அ)த்3விதீய பா4வே(அ)பி கத2ம் பூஜா விதீ4யதே ‖ 1 ‖

**சிஷ்யன் கேள்விகள் கேட்கிறான்: –**

சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் உள்ள (ப்ரஹ்மமான)து பிரிவற்றதாகவும், எவ்வித விகல்பத்திற்கும் இடமில்லாமல் ஒரே ரூபமாகவும், இரண்டாவது பொருளில்லாததாகவும் இருக்கும்போது, அதற்கான பூஜையானது எதற்காக செய்யப்பட வேண்டும்?

**பூர்ணஸ்யாவாஹனம் குத்ர ஸர்வாதா4ரஸ்ய சாஸநம் |**
**ஸ்வச்ச2ஸ்ய பாத்3யமர்க்4யம் ச சுத்3த4ஸ்யாசமநம் குத: || 2 ||**

எங்கும், எதிலும், நீக்கமற நிறைந்துள்ள பிரஹ்மத்திற்கு பூஜைகள், விக்ரஹம், ஆராதனை, ஆவாஹனம் போன்றவைகளை எல்லாம் எங்கு, எப்படி செய்ய முடியும்?

மேலும், எல்லாவற்றையும் தாங்குவதாக அது ஒன்று மட்டுமே இருக்கும்போது, அதற்கு வேறாக, உட்காருவதற்கு (அ) தாங்குவதற்கு மற்றொரு ஆஸனம் எப்படிக் கொடுக்க முடியும்?

அத்துடன், தூய்மையான அழுக்கற்ற அந்த ஒன்றிற்கு, ஆவாஹனம், அர்க்கயம், ஆஸமனம் போன்ற, தூய்மை செய்யக்கூடிய தீர்த்த நீராடல்கள் எதற்கு?

**நிர்மலஸ்ய குத: ஸ்நாநம் வாஸோ விச்வோத3ரஸ்ய ச |**
**அகோ3த்ரஸ்ய த்வவர்ணஸ்ய குதஸ்தஸ்யோபவீதகம் || 3 ||**

அப்பழுக்கற்றவருக்கு குளியல் எதற்காக? பிரபஞ்சத்தையே தன் வயிற்றில் அடக்கியுள்ளவருக்கு வஸ்திரம்தான் எப்படி உடுத்த முடியும்? குல, கோத்திரம் இல்லாதவருக்கு பூணூல் போட வேண்டிய அவசியம்தா உள்ளதா?

**நிர்லேபஸ்ய குதோ க3ந்த3: புஷ்பம் நிர்வாஸநஸ்ய ச |**
**நிர்விசேஷஸ்ய கா பூ4ஷா கோ(அ)லங்காரோ நிராக்ருதே: || 4 ||**

எதிலும் ஒட்டாதவருக்கு எதற்கு சந்தனப்பூச்சு? எவ்வித வாசனையுமற்றவருக்கு பூக்கள் எதற்கு? எந்த விசேஷமும் இல்லாதவருக்கு ஆபரணங்கள் ஏது? உருவம் இல்லதவருக்கு அலங்காரம் எதற்கு?

நிரஞ்ஜநஸ்ய கிம் தூ4பைர் தீ3பைர் வா ஸாவஸாக்ஷிண: |
நிஜாநந்தைத3க – த்ருப்தஸ்ய நைவேத்3யம் கிம் ப4வேதிஹ ‖ 5 ‖

தோஷமில்லாதவருக்கு தூபங்களினால் என்ன பிரயோஜனம்? ஸர்வ ஸாக்ஷியாக இருந்துக் கொண்டு, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறவருக்கு ஒளிதரும் தீப வெளிச்சங்களினால்தான் என்ன பயன்? உடலற்று, பசியற்று தன்னுடைய சுய ஆனந்தத்தில் எப்போதும் திருப்தி கொண்டுள்ளவருக்கு, உடலில் உள்ள வயிற்றுப்பசிக்கு உண்டான நைவேத்யமாக எதைக் கொடுத்து திருப்தி உண்டாக்க முடியும்?

விச்வாநந்த3யிதுஸ் – தஸ்ய கிம் தாம்பூ3லம் ப்ரகல்பதே |
ஸ்வயம்ப்ரகாச – சித்3ரூபோ யோ(அ)ஸாவர்காதி3பா4ஸக: ‖ 6

பிரபஞ்சம் முழுவதற்கும் ஆனந்தமளிக்கின்ற அவருக்கு எதற்கு தாம்பூலம்? (மற்றவர்களை மகிழ்ச்சியூட்டவே தாம்பூலம் அளிப்பது.)

மேலும், ஸ்வயம்பிரகாசமான ஞானஸ்வரூபம் ஆகிய அவருக்கு, கற்பூர நீராஞ்சனம் எதற்கு?

**கீ3யதே ச்ருதிதி4பிஸ் – தஸ்ய நீராஜா – விதி3: குத: |**
**ப்ரத3க்ஷிணே – மநந்தஸ்ய ப்ரணாமோ (அ)த்3வயவஸ்துந: ‖ 7 ‖**

எல்லையற்றவருக்கு ப்ரதக்ஷிணம் எப்படிச் செய்ய முடியும்? இரண்டற்ற ஒன்றாயாகிய ஏக வஸ்துவிற்கு நமஸ்காரம் செய்ய, அதற்கு வேறாக இங்கு யார் இருக்கிறார்கள்?

**வேத3வாசா – மவேத்3யஸ்ய கிம் வா ஸ்தோத்ரம் விதீ3யதே |**
**அந்தர் ப3ஹி: ஸம்ஸ்தி2தஸ்ய உத்3வாஸந விதி4: குத: ‖ 8 ‖**

வேத வாக்யங்களினாலேயே அறிய முடியாமல் இருப்பவருக்கு, ஸ்தோத்திரங்களாக எதைக்கொண்டு ஆராதிக்க முடியும்? மேலும், உள்ளும், புறமும் இல்லாத ஒன்றிற்கு, ஆவாஹனம், பூசைகள் முடிந்த பிறகு, அதன் இருப்பிடத்திற்கு எப்படி திருப்பி அனுப்ப முடியும்?

(பூஜை முடிவில் தேவதையை அதன் சொந்த இருப்பிடத்திறகு திரும்ப அனுப்பி வைப்பது **"உத்வாஸனம்"** எனப்படும்.)

## ஸ்ரீ குருருவாச: –

ஆராத4யாமி மணி ஸந்நிப4–மாத்ம–லிங்க3ம்
மாயாபுரீ ஹ்ருத3ய–பங்கஜ–ஸந்நிவிஷ்டம் |
ச்ரத்3தா4 நதீ3 – விமல சித்த ஜலாபி4ஷேகை:
நித்யம் ஸமாதி4 – குஸுமை – ரபுநர்ப4வாய || 9 ||

## ஸ்ரீ குரு பதில் அளிக்கிறார்:–

மாயையால் ஏற்பட்ட மாயாபுரி என்னும், ஒன்பது வாயில்கள் கொண்ட இந்த தூல உடலில் ஹ்ருதயத் தாமரையில் வீற்றிருக்கும், களங்கமற்ற ஸ்படிகம் போல, தூய்மையாக விளங்குகிற ஆத்மலிங்கத்தை, மாயையால் மயக்கமடைந்திருக்கும், சூக்கும மனம் மறுபடியும் ஸம்ஸார பந்தத்தில் அகப்படாமலிருக்கும் பொருட்டு, சிரத்தையாகிற நதியில் நிர்மலமான சித்தத்தினால் அபிஷேகங்கள் செய்து, சமாதியாகிற புஷ்பங்களினால் ஆராதிக்கிறேன்.

அயமேகோ(அ)வசிஷ்டோ(அ)ஸ்மீத் – யேவ – மாவாஹயேத் சிவம் |
ஆஸநம் கல்பயேத் பச்சாத் ஸ்வப்ரதிஷ்டா2த்மசிந்தனம் ‖ 10 ‖

மங்கள ஸ்வரூபியான பரம[தன்]னை தன்னில் தானாய் தனித்தவனாக இருக்கின்ற தன்னிடமே இருத்த (**ஆவாஹனம்**) வேண்டும். அதன்பிறகு, தன்னிடத்தில் நிலைத்திருக்கும் ஆத்மாவை மட்டுமே சிந்தனை செய்வதிலேயே தன்னுடைய மனதை அமர்த்த (**ஆஸனம்**) வேண்டும் என்பதாகும்.

புண்ய – பாப – ரஜஸ்ஸங்கோ3 மம நாஸ்தீதி வேத3நம் |
பாத்3யம் ஸமர்பயேத் வித்3வான் ஸர்வகல்மஷநாசநம் ‖ 11 ‖

‘**புண்ணியம், பாபம்** என்கிற அழுக்கின் சேர்க்கை **பரமனு[என]க்கு கிடையாது**’ என்று அறிவதே எல்லா அறியாமைகளை கழுவக்கூடிய பாத்யமாகக் கருதி, அறிவாளியானவன் கொடுக்க வேண்டும்.

அநாதி3 – கல்ப – வித்4ருத – மூலாஜ்க்ஞாந – ஜலாஞ்ஜலிம் |
விஸ்ருஜேதா3த்மலிங்க3ஸ்ய ததே3 வார்க்4ய – ஸமர்பணம் || 12 ||

அநாதி காலமாகத் தொடருகின்ற பிறப்பு - இறப்புக்கு காரணமான மூல அவித்யை என்னும், அறியாமை நீரை (**அர்க்யம்**), ஆத்ம லிங்கத்தின்மீது விட்டு, விடும்போது, அறியாமை அகன்று, ஆத்ம லிங்கம் (சுய அறிவு) பிரகாசிக்கத் தொடங்கும்.

ப்3ரஹ்மாநந்தா3ப்3தி4 கல்லோல கண கோட்யம்சலேசகம் |
பி3பந்தீந்த்3ராத3ய இதி த்4யாநமாசமநம் மதம் || 13 ||

பிரஹ்மானந்தம் என்கின்ற மிகப்பெரிய சமுத்திர நீரின், ஒரேஒரு துளியை மட்டும், இந்திரன் முதலான தேவர்கள் அருந்துகிறார்கள் எனும்போது, அந்த எல்லையற்ற சமுத்திரத்தின் ஒட்டுமொத்த ஆனந்தமும் ஆத்மாவினுடையது என்பதினால், அத்தகைய ஆத்மனாகிய பரம[தன்]னுடைய ஆனந்தத்தின் முன்னால், மற்ற அற்ப பொருட்களினால் உண்டாகும் ஆனந்தம் ஒன்றுமில்லை என்று, அந்த ஆத்மாவை தன்னில் தானாய் ருஷிப்பதே ஆஸமனம் ஆகும்.

ப்3ரஹ்மாநந்த3 – ஜலேனைவ லோகா: ஸர்வே பரிப்லுதா: |
அக்லேத்3யோ (அ)யமிதி த்4யாந – மபிஷேசன – மாத்மந: || 14 ||

பிரஹ்மானந்தம் என்கிற நீரினாலேயே எல்லா உலகமும் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஆனந்தத்திற்கு ஆதாரமான ஆத்மாவோ, அந்த நீரினால் நனைக்கப்பட முடியாதவர் என்று மனதினால் தியானிப்பதே, ஆத்மாவுக்கு செய்யும் அபிஷேகம் ஆகும்.

நிராவரண சைதன்யம் ப்ரகாசோ (அ) ஸ்மீதி சிந்தனம் |
ஆத்மலிங்க3ஸ்ய ஸத்3வஸ்த்ர – மித்யேவம் சிந்தயேன்முனி: || 15 ||

மறைக்கமுடியாத உள்ளுணர்வாகிய சைதன்யத்தின் பிரகாச ஒளியாக **'நான் இருக்கிறேன்'** என்று எண்ணுவதே, ஆத்மலிங்கத்திற்கான ஆடை என்று அறிய வேண்டும்.

(மறைத்துக்கொள்ளத்தான் நாம் ஆடை உடுத்துவது.)

**த்ரிகு3ணாத்மாசேஷ – லோக – மாலிகா ஸூத்ரமஸ்ம்யஹம் |**
**இதி நிச்சய ஏவாத்ர ஹ்யுபவீதம் பரம் மதம் || 16 ||**

முக்குணங்களை ஸ்வபாவமாகவுடைய, எல்லா உலகங்களும் சேர்ந்த மாலைக்கு ஸூத்ரமாக (நாராக) **‘நான் இருக்கிறேன்’** என்ற தீர்மானமே, இங்கு உத்தமமான யக்ஞோபவீத ஸூத்ரமாகக் கருதப் படுகிறது.

(நார் என்ற ஆதாரமின்றி பூக்களைத் தொடுக்க முடியாதது போல, ஆத்மாவின் ஆதாரமின்றி முக்குணமுமில்லை. மலர்கள் வாடி அழிந்தாலும், நார் வாடாமல் அழியாமலிருப்பது போல, குணங்கள் மாறி நாசமுற்றாலும் ஆத்மா மாறுதலும், நாசமும் இன்றி விளங்குகிறது.)

அநேக வாஸநா மிச்ர ப்ரபஞ்சோ (அ) யம் த்4ருதோ மயா |
நாந்யேநேத்யனுஸந்தா4னா – மாத்மநச் – சந்தனம் ப4வேத் ‖ 17 ‖

“பலவிதமான வாஸனைகள் கலந்த இந்த மொத்த பிரபஞ்சமும், மனமாகிய என்னுடைய வாஸனைகள் மூலமாகத்தான் தோன்றியுள்ளது.” வேறு எத்னாலும் இல்லை என்பதை, மனதின் உயர்பரிமாணமான புத்தி சக்தியினால் அறிந்துக் கொள்வதுதான் ஆத்மாவிற்கு சந்தனம் கொடுப்பதாக ஆகும்.

ரஜஸ் – ஸத்வ – தமோ – வ்ருத்தி த்யாக3ரூபைஸ் திலாக்ஷதை: |
ஆத்மலிங்க3ம் யஜேத் நித்யம் ஜீவன் முக்தி ப்ரஸித்3த4யே ‖ 18 ‖

ராஜஸம், தாமஸம் மற்றும் ஸத்வம் போன்ற முக்குணங்களாகிய மனோவிருத்திகளை விடுவது என்பது, எள்ளு மற்றும் அக்ஷதை போன்றவைகளை ஆத்ம லிங்கத்திற்கு அர்பணித்து பூசை செய்வதற்கு ஒப்பாகும். இதனால், ஜீவன்முக்தி நிலை உண்டாகும்.

(சித்த ஓட்டத்தை விடுவதாக எண்ணுவதே அக்ஷதா ஸமர்ப்பணம்.)

ஈச்வரோ கு3ருராத்மேதி பே4த – த்ரய விவர்ஜிதை: |
பி3ல்வ – பத்ரை – ரத்3விதீயை – ராத்மலிங்க3ம் யஜேத் சிவம் || 19 ||

ஈஸ்வரன், குரு, ஆத்மா என்கிற மூன்றும் வேறு, வேறு அல்ல! என்ற எந்தவித வேற்றுமையும் இல்லாமல், இரண்டற்றதாயிருக்கும் தன்மையாகிற வில்வ இலைகளினால் ஆத்மலிங்கத்தைப் பூஜிக்க வேண்டும்.

ஸமஸ்த வாஸநா த்யாக3ம் தூ4பம் தஸ்ய விசிந்தயேத் |
ஜ்யோதிர்மயாத்ம விஜ்ஞாநம் தீ3பம் ஸந்3தர்சயேத் பு3த4: || 20 ||

எல்லா விதமான மனதின் வாஸனைகளையும் விட்டு விடுவதையே (ஆத்மாவாகிய) அவருக்கு தூபம் என்று எண்ணவேண்டும். அறிவு ஒளியின் பிரகாசத்தால், ஆத்மாவை நன்கு அறிவதே, தீபம் காட்டுவது என்று அறிய வேண்டும்.

**நைவேத்3ய – மாத்மலிங்க3ஸ்ய ப்3ரஹ்மாண்டா3க்3யம் மஹோத3னம் |**
**பி3பா (சிதா3) நந்தரஸம் ஸ்வாது3 ம்ருத்யு – ரஸ்யோபஸேசநம் ‖ 21 ‖**

எல்லையற்ற பிரமாண்ட, பேரண்ட ப்ரபஞ்சமே ஆத்மாவிற்கு ருஷியுள்ள வைவேத்தியம் ஆகும்.

('சிதானந்த ரஸம்' என்ற பாடத்தின்படி: (ப்ரஹ்மத்துக்கு) ஞான இன்பமே ரஸமாகும் - கனிச் சாறாகும். 'பிபானந்த ரஸம்' என்ற பாடத்தின்படி: (ஹே ப்ரம்ம ஸ்வரூபியே) ஆனந்த ரஸத்தைப் பருகு.) அதற்கு மிருத்யு வேதான் வியஞ்சனம். (உலகத்தை அன்னமாயும், உபநிஷதம் கூறுவது போல, காலனையே (காலத்தையே) ஊறுகாயாகவும் விழுங்குவது ப்ரஹ்மம்.)

**அஜ்ஞானோச்சி2ஷ்டகரஸ்ய க்ஷாளநம் ஜ்ஞானவாரிணா |**
**விசுத்3த4 ஸ்யாத்மலிங்க3ஸ்ய ஹஸ்த ப்ரக்ஷாளணம் ஸ்மரேத் ‖ 22 ‖**

அஞ்ஞானம் என்கிற அசுத்தமான கையை, ஞானம் என்ற நீரினால் கழுவுவதே, அதிபரிசுத்தமான ஆத்மலிங்கத்திற்கு கையலம்புதல் ஆகும்.

**ராகா3தி3 கு3ணசூந்யஸ்ய சிவஸ்ய பரமாத்மந: |**
**ஸராக3 விஷயாப்4யாஸ த்யாக3ஸ் தாம்பூ3ல – சர்வணம் || 23 ||**

எல்லையற்ற, எதிலும் விருப்பமில்லாத நிர்குண ஸ்வரூபமாகிய சிவபரமாத்மாவிற்கு, தாம்பூலம் கொடுப்பது என்பது, மனதின் ஆசைகளாகிய விருப்பத்தை விடுவதற்கு ஒப்பாகும்.

அது எப்படியெனில், ஆத்மஞான விஷங்களை சாஸ்திரங்களின் மூலம் கேட்டதின் விளைவாக, உண்டான ஞானத்தின் மூலம், மனதின் தேவையற்ற விசய, சுகங்களை அசைப்போட்டு, விசாரம் செய்து, அவைகளை வெளியேற்றுவது ஆகும்.

(தாம்பூலம் போடுவது என்பது, அதை வாயில் போட்டுக் கொண்டு அசைப்போடுவதும், இறுதியில் அதை வெளியேற்றி விடுவதுமாகிய ஒரு செயல் ஆகும். அதுப்போல, மனதை விசாரித்து, விபரீத எண்ணங்களையெல்லாம் வெளியேற்றுவது ஆகும்.)

அஜ்ஞாந த்3வாந்த வித்4வம்ஸ ப்ரசண்ட – மதி – பா4ஸ்கரம் |
ஆத்மநோ ப்3ரஹ்மதா ஜ்ஞாநம் நீராஜநமிஹாத்மந: || 24 ||

சாஸ்திர, ஸ்ரவணங்களினால் உண்டான ஞான ஒளியின் முன்னால், அஞ்ஞான இருளைப் போக்கிக் கொண்ட மனம், சூரியனைப்போல இருளை நீக்கி ஒளிப்பிரகாசத்தை தருவதாக இருக்கும் நிலையானது, அந்த ஆத்மாவிற்கு கற்பூர நீராஞ்சனம் காட்டுவதற்கு ஒப்பாகும்.

விவித4 ப்3ரஹ்ம ஸந்த்3ருஷ்டி மாலிகாபி4 ரலங்க்ருதம் |
பூர்ணாநந்தா3த்மதா த்3ருஷ்டிம் புஷ்பாஞ்ஜலிமனுஸ்மரேத் || 25 ||

பல உதிரி மலர்கள் ஒன்று சேர்ந்த ஒரு பூமாலை பார்ப்பதற்கு அலங்காரம் கொண்டதாக எப்படி இருக்குமோ? அப்படி, பலவிதமான அண்ட, சராசரங்கள் ஒன்று சேர்ந்த இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சமும் அந்த அழகான ப்ரஹ்மம்தான் என்ற நல்லறிவே, பூமாலை அலங்கரிப்பு ஆகும்.

அதிலே, அலங்காரம் நிறைந்த ஆனந்த ஸ்வரூபமான **‘ப்ரஹ்மமே நான்’** என்று அறிவதையே புஷ்பாஞ்ஜலியாக நினைக்க வேண்டும்.

பரிப்4ரமந்தி ப்3ரஹ்மாண்டா3 ஸஹஸ்ராணி மயீச்வரே |
கூடஸ்தா2சலரூபோ (அ)ஹமிதி த்4யானம் ப்ரத3க்ஷிணம் ‖ 26 ‖

“**ஈசுவரனாக இருக்கின்ற என்னிடத்தில்தான் அண்ட, சராசரங்களாகிய, ப்ரஹ்மாண்டங்கள் சுழலுகின்றன.**” அவ்வாறு, அசைகின்ற அவைகளுக்கெல்லாம் ஆதாரமாக, அசையாமல் இருக்கின்ற ஆத்மாவாக பரம[தன்]னை அறிவதுதான் **பிரதக்ஷிணம்** செய்வதாகும்.

விச்வ – வந்த்3யோ (அ)ஹ – மேவாஸ்மி நாஸ்தி வந்த்3யோ
ம3தந்யக: |
இத்யாலோசனமேவாத்ர ஸ்வாத்மலிங்க3ஸ்ய வந்த3னம் ‖ 27 ‖

பரம[தா]ன் ஒருவன் மட்டுமே, இந்த உலகம் முழுவதிலும் வணங்கத்தக்கவனாக இருக்கிறான். அவ[என்]னைத்தவிர, வணங்கத்தக்கவர்களாக யாரும் இல்லையென ஆய்ந்து தெளிவதுதான் ஆத்மலிங்கத் திற்கான வந்தனமாகும்.

ஆத்மந : ஸத்க்ரியா ப்ரோக்தா கர்தவ்யாபா4வ பா4வநா |
நாமரூப – வ்யதீதாத்ம – சிந்தனம் நாமகீர்த்தனம் || 28 ||

ஆத்மாவிற்கு செய்யவேண்டியது ஒன்றுமில்லை என்பதை அறிவதே, அந்த ஆத்மாவிற்கு செய்யும் உபசாரம். நாம கீர்த்தனமானது நாம, ரூபங்களைக் கடந்த, அந்த ஆத்மாவை எப்போதும் சிந்திப்பது மட்டும்தான்.

ச்ரவணம் தஸ்ய தே3வஸ்ய ச்ரோதவ்யாபா4வ சிந்தனம்
மநநம் த்வாத்மலிங்க3ஸ்ய மந்தவ்யாபா4வ சிந்தனம் || 29 ||

அந்த ஸ்வயம் பிரகாச அத்மாவைப் பற்றி காதுகளால் கேட்பதையே **ஸ்ரவணம்** என்றும், அவ்வாறு, கேட்டவைகளைப்பற்றி மனம் சதா சிந்திப்பதே **மனனம்** என்றும் உள்ளது. ஆனால், இந்த இரண்டையும் கடந்த ஆத்மாவில் நிலைப்பெற்று இருப்பதே ஆத்ம நிஷ்டையாகிய நிதித்யாஸனம் ஆகும்.

த்4யாதவ்யாபா4வ விஜ்ஞாநம் நிதி3த்4யாஸனமாத்மந: |
ஸமஸ்த ப்4ராந்தி விக்ஷேப ராஹித்யே நாத்ம நிஷ்ட3தா ॥ 30 ॥

ஸமாதி4ராத்மநோ நாம நாந்யத் சித்தஸ்ய விப்4ரம: |
தத்ரைவம் ப்3ரஹ்மணி ஸதா3 சித்த விச்ராந்திரிஷ்யதே ॥ 31 ॥

ஆத்மாவிற்கு வேறாக எதுவுமே செய்ய வேண்டியதில்லை என்ற நிதித்யாஸன நிலையில் நிலைப் பெற்ற ஆத்ம நிஷ்டையில், ஸமாதி என்பது எல்லாவித மனமயக்கமும், மனோவிவகாரங்களும், நீங்கிய நிர்விகல்ப நிலையில், அந்த மனமானது, அறிவாகிய ஆத்மாவிடத்திலேயே நிலைத்திருத்தல் என்பதுதான்.

ஏவம் வேதா3ந்த கல்போக்த ஸ்வாத்ம லிங்க3 ப்ரபூஜனம் |
குர்வன்னாமரணம் வா (அ)பி க்ஷணம் வா ஸுஸமாஹித: ‖ 32 ‖


ஸர்வ – து3ர்வாஸநா ஜாலம் பத2பாம்ஸுமிவ த்யஜேத் |
விதூ4யாஜ்ஞாந து: கெ2ளக4ம் மோக்ஷாநந்த3ம் ஸமச்நுதே ‖ 33 ‖

இவ்விதமாக, வேதாந்தம் என்ற விருட்சத்தில் வந்த கிளைகளாகிய உபநிஷதங்கள் கூறும், உயரிய ஆத்மஞானமெனும், தன்னுணர்வை, தன் சுயஅறிவை உணர்ந்துக்கொண்டவன் மனமற்ற நிலையில், மரணம் வரையிலோ, அல்லது ஒரு க்ஷணமாவது ஆத்மலிங்க பூஜையில் ஆழ்ந்திருக்க முடியுமென்றால், அவனது அனைத்து அறியாமைகளும், வாஸனைகளையும், அவன் காலிலுள்ள தூசி போன்று, துச்சமாக உதறி விட்டு, துன்பங்களைக் கலைந்த, உத்தம ஞானியாக மோக்ஷத்தை மட்டுமே அனுபவிப்பான்.

## ஓம் தத் ஸத்

# நிர்குண மானஸ பூஜை

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



**ப்ரக்ஞன்**